1980 பிப்ரவரி 11] [திரு. என். சங்கரய்யா]

செய்யும்போது முற்போக்கு கூட்டடணியின் சார்பில் வெளி நடப்பு செய்வதாக மாண்புமிகு திரு. மாரிமுத்து அவர்கள் அறி வித்தார்கள். முற்போக்கு கூட்டணி என்ற ஒரு கட்சி தமிழ் நாடு சட்டசபையிலே இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிறதா? அதனுடைய தலைவராக மாண்புமிகு மாரிமுத்து அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்களா? அப்படி ஏதாவது தகவல் தங் களுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, அவருக்குச் சந்தேகம் வந்தது ஏன் என்றால், முற்போக்குக் கூட்டணி என்று இங்கே அவையிலே இல்லை. கூட்டணியினுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே இருக்கிறார்கள். ஒவ்வொரு கட்சியாகப் பெயர் சொல்ல வேண்டாமென்பதற்காக நான் அப்படிச் சொன் னேன்.

திரு. நா. சுந்தரராஜ்: பாயிண்ட் ஆப் ஆர்டர் ........

திரு. ரா. உமாநாத்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். சார் ..............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அட்ஜர்ன்மென்ட் மோஷனுக்குப் பின்னாலே பாயிண்ட் ஆப் ஆர்டர் அனுமதிப்பது இல்லை.

திரு. ரா. உமாநாத்: பர்சனல் எக்ஸ்பிளனேஷன் ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பர்சனல் எக்ஸ்பிள னேஷன் பின்னால் தரலாம். இப்போழுது இல்லை. கூச்சல் குழப்பம்).

### 5. கவன ஈர்ப்பு.

#### நாகப்பட்டினம் துறைமுகத்தில் "எம். வி. சிதம்பரம்" கப்பல் நிறுத்துவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து. 54 வது விதி யின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவனஈர்ப்பு. திரு. ரா. உமாநாத், திரு. மா. மணி மாறன் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

[1980 பிப்ரவரி 11

திரு. ரா. உமாநாத் : கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

'' நாகப்பட்டினம் துறைமுகத்தில் '' எம். வி. சிதம்பரம்'' கப்பல் நிறுத்துவதில்லை என்று இந்தியன் கப்பல் கழகம் எடுத்துள்ள முடிவின் காரணமாக 3.000க்கு மேற்பட்ட தொழி லாளர்கள் வேலை இழக்கும் நிலை குறித்து ''.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, நூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவுக்கும் மலேசி யாவுக்கும் இடையே போய் வந்து கொண்டிருக்கும் பயணிகள் கப்பல்கள் நாகப்பட்டினத்தைத் தொட்டுச் சென்றுள்ளன. இவை போகும் பொழுதும் வரும் பொழுதும் நாகப்பட்டினம் துறை முகத்தில் நின்று செல்வது வழக்கம். பல ஆண்டுகளாக இரண்டு பிரயாணிகள் கப்பல்கள் இந்த வழியாக இடையூறு ஏதுமில்லாமல் சென்று வந்து கொண்டிருந்தன. '' எஸ். எஸ். ரஜுலா '' என்பது இந்தப் பயணிகள் போக்குவரத்துக்காகவே கட்டப் பட்டு நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகவே பயன்படுத்தப் பட்ட பிறகு இந்தக் கப்பல் விற்பனை செய்யப்பட்டு உடைக்கப் கப்பட்டது. 1973-ல் '' எஸ். எஸ். ஸ்டேட் ஆப் மதராஸ் என்னும் கப்பலுக்குப் பதிலாக '' எம். வி. சிதம்பரம் என்னும் கப்பல் ஷிப்பிங் கார்ப்பரேஷனால் விடப்பட்டது. எஸ். எஸ். ரஜுலா நிறுத்தப்பட்ட பிறகு எம். வி. சிதம்பரம் என்னும் ஒரு பிரயாணிகள் கப்பல் மட்டுமே நாகப்பட்டினத்திற்கு வந்து போய்க் கொண்டிருந்தது. இதற்கு முன்னர் பயணிகள் கப்பல் கள் ஆண்டு முழுவதும் நாகப்பட்டினத்திற்கு வந்து போய்க் கொண்டிருந்தபோதும் ''எம். வி. சிதம்பரம்'' கப்பல் அக்டோபரிலிருந்து பிப்ரவரி வரை காலநிலை சரியில்லை என்ற காரணத்தால் அந்த மாதங்களில் நாகப்பட்டினத்தில் நிற்காமல் போய்க்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு முதல் எம். வி. சிதம்பரம் என்னும் கப்பல் இனி எப்பொழுதும் நாகப் பட்டினத்தில் நிற்பதை அடியோடு தவிர்த்துவிடும் என்று ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா அறிவித்துள்ளது.

இந்த கப்பலை நம்பி ஏறத்தாழ நேரடியாக 1.000 பேர்கள் தங்களது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இவர்கள் சாதாரணமாக பயணிகளின் மூட்டை முடிச்சுகளைப் படகுகளில் ஏற்றிக் கப்பலுக்கும் அதே மாதிரி கப்பலிலிருந்து இறக்கிப் படகு கள் மூலம் கரைக்கும் அங்கே உள்ள சோதனைக் கூடத்திற்குக் கொண்டு வருவதுமாக வேலையைச் செய்பவர்கள். இவர்கள் தவிர படகு வேலையாட்கள். கப்பலில் பாரம் இறக்கி ஏற்றுபவர் கள் போன்ற மேலும் 2.000 பேர்கள் இந்தக் கப்பலையே

1980 பிப்ரவரி 11]

தங்கள் வாழ்க்கைச் சாதனமாக நம்பி இருக்கின்றனர். இந் நிலையில். நாகப்பட்டினத்தில் இந்தக் கப்பல் நிற்காமல் போவது இவர்களைப் பெரிதும் பாதிக்கும். தற்சமயம் இக் கப்பல் அக்டோபர் முதல் பிப்ரவரி வரையிலான காலத்தில் கால நிலை சரியில்லாததினால் கப்பல் நிற்காதபொழுதே இவர்கள் தங்களது வாழ்க்கையை நடத்துவதில் மிகவும் அல்லல் பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கப்பல் இந்தத் துறைமுகத் திற்கு வருவது தவிர்க்கப்படுவதால் இத்துறைக்குக் கிடைக்க வேண்டிய துறைமுகத்தீர்வை பயணிகள் கட்டணம். மிகையான மூட்டை முடிச்சுகளுக்கான கட்டணம் ஆகிய வருவாய் யாவும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது. இதன் காரணமாக ஆண்டொன்றுக்கு ஒரு லட்ச ரூபாய்க்கு மேலாக இத்துறைக்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது. மேலும் இந்தக் கப்பல் போக்குவரத்தை அடிப்படையாகக் கொண்டே 9 இலட்சம் ரூபாய் செலவில் எல்லா வசதிகளும் கூடிய பயணிகள் தங்கும் நிலையம் ஒன்றுகூட பயணிகளுக்காகவே இந்தத் துறை முகத்தில் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கப்பல் தவிர்க்கப்படு வதன் காரணமாக இந்த வசதிகள் எல்லாம் வீணாகின்றன.

அதைப்பற்றி எல்லாம் 28—1—1980 அன்று தமிழகத்தின் சார்பில் மைய அரசுக்குத் தெரிவித்து இருக்கிறோம். மாண்பு மிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கூட, அவர்களுடைய சொந்த முயற்சியின் அடிப்படையில்கூட இதை மைய அரசுக்குத் தெரிவித்தார். மாநில அரசு தொடர்ந்து மீண்டும் வலியுறுத்து வதன் அடிப்படையாக சிதம்பரம் கப்பல் தற்போது மீண்டும் அந்தத் துறைமுகத்திற்கு வந்திருக்கிறது. இருந்த போதிலும் அங்கே இருக்கிற மக்களுக்குத் தொடர் இன்னல் இருக்காமல் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தின் பொருட்டு 3 சிறு கப்பல்கள் அங்கு திருப்பி அனுப்பப்படுமேயானால் அந்தப் பகுதியிலே இருக்கிற ஏழைகளுக்கு, அவர்கள் சந்தித்து வரும் இன்னல் இடர்பாடுகள் நீங்கும் என்று மைய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்தி இருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, மீண்டும் கப்பல் நிறுத்துவது என்று மாநில அரசினுடைய முயற்சியையும். அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிற மாதிரி நானும் தோழர் இராமமூர்த்தி அவர்களும் எடுத்த முயற்சியின் விளைவாக அதை 14-ந் தேதி அங்கே நிறுத்த ஏற்பாடு செய்ததற்கு மிக்க மகிழ்ச்சி. ஆனால் அந்த 4 மாதங்கள் நிறுத்துவது என்பது காலநிலை சரியில்லை என்ற காரணத்தால் வருடா வருடம் 4 மாதங்கள் நிறுத்தாமல் இருக்கிறது. ஆனால் அந்த 4 மாதங்களில்தான் அங்கே இருக்கக்கூடிய ஏற்றுமதியாளர்கள் தனியார் கப்பலை

வாடகைக்கு அமர்த்தி கொண்டிருக்கிறார்கள். அந்தக் கப்பலுக்கு மட்டும் எப்படி பாதிக்கும். ஆகவே வருஷம் பூராவும் இந்த கப்பல் வந்து நின்று போவதற்கான ஏற்பாட்டைத் தாடக்ர்ந்து வற்புறுத்தி செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

[முற்பகல் 11-00]

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். மற்ற பல துறைமுகங்களில் காலநிலையைக் கருத்தில் கொள்ளாமல் கப்பல் வந்து செல்லும் போது நாகப்பட்டிணத்திற்கு கப்பலை அனுப்பும்போது மட்டும் ஏன் காலநிலையை ஒரு காரணமாக சொல்ல வேண்டும்? ஆகவே, அந்த கருத்து ஒப்புக்கொள்ளக்கூடியது அல்ல என்று வலியுறுத்தியிருக்கிறோம். தொடர்ந்து வலியுறுத்தி, அதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

திரு ரா. உமாநாத்: தலைவரவர்களே, இந்த சிதம்பரம் கப்பலில், சாதாரண பாசஞ்சர் கப்பலில் மலேசியாவுக்கு போவது என்றால் 250, 300 ரூபாய் என்றால் இந்தக் கப்பலில் போவதற்கு 1,000 ரூபாய் கேட்கிறார்கள். ப்ளேன் டிக்கட்டே 1,250 ரூபாய்தான். அதனால் மேல்நாட்டுக்காரர்கள் ப்ளேனிலே போய்வருகிறார்கள். சாதாரண மக்களுக்கு முடியாது. ஆகவே, மலேசியா, சிங்கப்பூருக்கு போய் வருவதற்கான கட்டணத்தைக் குறைப்பதோடு, இன்னும் மூன்று கப்பல்களை அங்கே நிறுத்த முயற்சிகள் செய்துவருவதாகச் சொன்னார்கள், அவை பாசஞ்சர் கப்பல்களாக இருக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த ஆலோசனையை ஏற்கனவே கூறியிருக்கிறார்கள். அதை மத்திய அரசுக்குத் தெரிவித்து, தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு மா. மணிமாறன்: தலைவரவர்களே, அக்டோபர் முதல் பிப்ரவரி வரையில் கப்பல்கள் வராத காரணத்தால் அங்கே இருக்கிற தொழிலாளர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அந்த மாதங்களில்தான் தஞ்சை மாவட்டத்தில் சிரமம் அதிகமாக இருக்கிறது. எனவே இதில் அரசு தலையிட்டு, உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். சென்னையிலிருந்து நாகைக்கு ஒரு நாள் பயணம்தான். "வெதர்

ரிப்போர்ட்' அடிக்கடி கொடுக்கிறார்கள். ஆகவே, வெதர் ரிப்போர்ட்டைப் பார்த்து, அந்த ஒரு நாள் பயணத்தை மேற்கொள்ளலாம்; கப்பலல தடுக்க வேண்டியதில்லை. அதற்கு அரசாங்கம் முன்வருமா? அதோடு, வேலை இல்லா மல் இருக்கும் காலங்களில் அந்தத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பி னர் திரு உமாநாத் அவர்கள் தொடர்ந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தப் பிரச்சினையை எழுப்பிக்கொண்டிருக் கிறார்கள். நாங்களும் மத்திய அரசிடம் இதைப் பற்றி எடுத்துக்கூறி, வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக் கிறோம்.

## 6. தன்னிலை விளக்கம்.

### அ. உறுப்பினர் பற்றி மற்றொரு உறுப்பினர் உபயோகித்த வார்த்தைகளைக் குறித்து.

திரு ரா. உமாநாத்: சார், நான் ஏற்கனவே பர்சனல் எக்ஸ்பிளனேஷன் கேட்டேன். பின்னால் அனுமதி தருகி றேன் என்று சொன்னீர்கள். பர்சனல் எக்ஸ்பிளனேஷ னுக்கு மட்டும் அனுமதி தாருங்கள் சொல்லிவிடுகிறேன்.

இன்று காலை 9.30 மணிக்குத்தான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன் என்று நண்பர் சுப்பு சொன்னார். நீங்கள் அதை விளக்கினீர்கள். இருந்தாலும் ''ஏற்பாடு செய்து'' என்ற வார்த்தைகளையும் சேர்த்து சொன்னார்கள் It is an insinuation against a member அதற்காக வேண்டுமானால் பிரிவிலேஜ் மோஷன் மூவ் பண்ணுங்கள் என்று சொன்னார். அந்த அளவுக்கு நான் கீழ்த்தரமாக போகவிரும்பவில்லை. நான் கொடுத்திருக்கிற ''கால் அட்டன்ஷன்'' வருகிறது, அப்புறம் அட்ஜர்ன்மென்ட் மோஷன் வருகிறது என்ற காரணத்தால் நான் அங்கே இருந்து குறிப்புகள் எழுதிக்கொண்டிருந்தேன். என்னிடம் அவர் கேட்டிருந்தால் கூட நான் சொல்லியிருப்பேன். அவர் கேட்க வில்லை. நான் குறிப்புகள் தயார் செய்தததைப் பார்த்து, அப்போதுதான் அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுக்கிறேன் என்று நினைத்துக்கொண்டார். விவரத்தையும் தெரிந்து கொள்ளாமல், என்னையும் கேட்காமல் இப்படி சொன்னது சரியல்ல. In the House we must maintian a standard,

என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.